திரு. எம். சுரேந்திரன் : புதிதாக ஆசிரியர்களை நியமிக்கும் போது, அவர்கள் தேறிய ஆண்டைக் கணக்கில் கொண்டு ஸீனியாரிடிபடி வேலையில் நியமிக்கப்படுகிறுர்களா? அல்லது, 1970-ம் ஆண்டில் தேறியவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் 1973-ம் ஆண்டில் தேறியவர்களை முதலில் எடுத்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறதா? நியமனங்கள் ஸீனியாரிடிபடி செய்யப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் தேறிய ஆண்டைக் கணக்கிட்டு—அதாவது 1967-ம் ஆண்டில் தேறியவர்களை முதலிலும், அடுத்து 1968-ம் ஆண்டில் தேறியவர்களையும், அதற்கடுத்து 1969-ம் ஆண்டில் தேறியவர்களையும் எடுத்துக் கொள்ளும் முறை கடைப்பிடிக்க வேண்டுமென்றுதான் கட்டாயமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனல், தனியார்ப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அதை நாம் வலியுறுத்த முடியாத நிலை இருக்கிறது. ஊராட்சி மன்றப் பள்ளிகளைப் பொறுத்து அதைத் திவிரமாக அவர்கள் கடைப்பிடிக்காமல் இருக்கிறுர்கள். அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நாம் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேம்.

Assistance to writers among Linguistic Minorities

* 252. *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH; Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to encourage good writers among the Linguistic Minorities in this State by granting them financial aid; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : There are a number of good Telugu writers and Pandits in our State who for want of encouragement are not able to publish their books or write new books. They are not able to get encouragement from other States

1973 நவம்பர் 21]

because they are here. Will the Hon. Minister for Education allot some more funds and give them financial aid to Telegu and other minority language Pandits so that they may get encouragement and write more books and publish them?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மொழிக்கு ஊக்கம் அளிக்கும்வகையில் அந்த மொழியில் நூல் எழுதுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. மற்ற மொழிகளைப்பற்றி அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மொழிக்கான உதவி செய்யும் வகையில், கேரளத்தில் மலையாள மொழிக்கும், கர்நாடக மாநிலத்தில் கன்னட மொழிக்கும், ஆந்திரத்திலே தெலுங்கு மொழிக்கும், மற்றபடி இந்தி மொழிக்கும், மராட்டிய மொழிக்கும் அந்தந்த மாநிலங்களில் அதற்கு ஊக்கம் தந்து வருகிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்மொழியிலே எழுதுபவர்களுக்கு இப்பொழுது இருக்கும் திட்டம் இருக்கிறது. சிறுபான்மை மொழிகளைப்பற்றி இதுவரையில் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the census in our State, in addition to Tamil writers, there is the Telugu language which is the language of the second minorities. May I know whether the Hon. Minister will consider the cases of Telugu writers also? Because, there are many Telugu writers of Andhra staying in our State and therefore, will the Hon. Minister give incentive to Telugu and Malayalam writers also?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது அதுபற்றி திட்டம் இல்லை. விண்ணப்பம் ஏதேனும் வந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

Malayalam Teachers Training School at Vilavancode

*253 Q.—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Education and Tourism be pleased to state whether the Government Malayalam Teachers Training School at Vilavancode has been closed from this year?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். தேவைக்கு மேலாகவே பயிற்சி பெற்ற மலையாளம் ஆசிரியர்கள் இருப்பதால், இப் பயிற்சிப் பள்ளி மூடப்பட்டுள்ளது.